# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.Voc.** DEGREE EXAMINATION – **3D ANIMATION / DIGITAL JOURNALISM**

FIRST SEMESTER – NOVEMBER 2016

**16UTL1RL03 - TAMIL (VOC) - I**

Date: 01-11-2016 Dept. No. Max. : 100 Marks
Time: 01:00-04:00

**பகுதி - அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. பாரதியார் குறிப்பிடும் புலவர்களின் பெயர்களைத் தருக.
02. ‘சோசலிசம்’ என்றால் என்ன?
03. பத்தாவது தடவையாக விழுந்தவனுக்கு
முத்தமிட்டுச் சொன்னது பூமி
‘ஒன்பது முறை எழுந்தவனல்லவா நீ!’ - பொருள் தருக.
04. சிகரெட் பெட்டிகள் சின்னச் சின்னச் -------------------.
05. பட்டினத்தார் குறிப்பிடும் முன்னை இட்ட தீ, பின்னை இட்ட தீ எவ்விடத்தில் நிகழ்ந்தது?
06. மூவகை மக்கள் யாவர்?
07. ‘கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே
காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே’ - விளக்குக.
08. ‘சின்னவோர் பொருள்தந் தோரைச் சிவனுள் ளளவு முள்ளத்து
உன்னவே வேண்டுமென்ன உரைத்தனர் பெரியோர்’ - பொருள் தருக.
09. பாரதியார் படைப்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
10. பொருள் தருக : அரம், அறம், ஆல், ஆள்

**பகுதி - ஆ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. ‘புறாக்கள்’ மனிதருக்குக் கற்றுத் தரும் பாடங்களை தெரியப்படுத்துக.
12. நட்பின் உயர்வுகளை ‘எஞ்சோட்டுப்பெண்’ கவிதை வழி உரைக்க.
13. நும் பாடப்பகுதியில் இடம்பெற்ற ஔவையாரின் மூதுரைப்பாடற் கருத்துகளைத் தருக.
14. குற்றால மலையின் வளத்தினை எழுதுக.
15. பின்வரும் தொடர்களில் உள்ள பிழைகளைக் களைக.
அ) ஒரு அறிவிப்பு
ஆ) பேராசிரியர் தன் மாணவர்களை ஊக்குவிப்பார்
இ) மாடுகள் வந்தது
ஈ) நகரப் பேருந்துகள் ஏன் மெதுவாகச் செல்கின்றது?
உ) நீ எக்சாம் நல்லா எழுதிட்டே பாஸ் பண்ணுவே
ஊ) செய்திகள் வாசிப்பது செந்தமிழ் அரசு
எ) எனக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுத்தது சாம்சன்
16. ‘காகித உறவு’ கதை கூறும் இன்றைய உறவுநிலைகளைப் புலப்படுத்துக.
17. வீரமாமுனிவர், ஜி.யு.போப் ஆகியோர்தம் தமிழ்ப்பணிகளைச் சுட்டுக.

**பகுதி - இ (3 x 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. செந்தமிழ்நாடு கவிதை கூறும் தமிழ்நாட்டின் சிறப்புகளைக் கட்டுரைக்க.
**( அல்லது )**
திரைப்படங்களின் அவலநிலையைத் ‘தீக்குச்சிக்குத் தின்னக்கொடுப்போம்’ கவிதை வழி உரைக்க.
19. தாயன்பின் பெருமைகளாக பட்டினத்தார் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.
**( அல்லது )**
நும்பாடப்பகுதியில் இடம்பெற்ற வேதநாயகரின் பாடற்செய்திகளைத் தருக.
20. ‘குருபீடம்’ கதை காட்டும் சமுதாயம் எத்தகையது என்பதைக் காட்டுக.
**( அல்லது )**
தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் குறித்து எழுதுக.

**************